**<u>*ஸ்வாமி ஶ்ரீதேசிகனுக்கு ப்ரஸாதிக்கப்பட்ட பிருதத் திருநாமங்கள் பற்றிய குறிப்பு*</u>**



***ஶ்ரீ. உ.வே. வித்வான். திருவள்ளூர். திருமலை. ஈச்சம்பாடி. ரங்கநாதார்ய மஹாதேசிகன்***

***அ. வேதாந்தாசார்யர் (வேதாந்த தேசிகன்),***

***ஆ. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்,***

***இ. கவிதார்க்கிக ஸிம்ஹர் (கவிதார்க்கிக கேஸரீ)* & *ஈ. ஸமஸ்யா ஸஹஶ்ரீ***

**என்ற நான்கு பிருதத் திருநாமங்கள் *ஸ்வாமி ஶ்ரீதேசிகனுக்கே உரியனவாய் அமைந்தன.***

**கோயிலிலும் மற்றும் உள்ள திவ்யதேசங்களிலும் முன்னும் பின்னும் அக்காலத்தில் வாழ்ந்துள்ள**

எந்தப் பெரியோருக்குக்கும் அமையாதவை
இந்தப் பிருதங்கள்.

ஸ்ரீதேசிகன் அருளிய *‘யாதவாப்யுதயம்’ * எனும் காவ்யத்திற்கு வ்யாக்யானம் செய்த *அப்பய தீக்ஷிதர்* எனும் அத்வைத ஆசார்யர், முதல் ஸர்க்க இறுதியில் முதல் மூன்று பிருதத் திருநாமங்களுக்கு *விளக்கம் தந்துள்ளார்.*

ஸ்வாமி தேசிகன் தனது *சாஸ்த்ர ஜ்ஞாநம், கவிதைத் திறன், தர்க்க பாண்டித்யம்* ஆகியவற்றைக் கொண்டு பகவத் ராமாநுஜ தர்சனத்தை ஸ்தாபநம் செய்ததற்கு உகந்து

ஸ்ரீரங்கம் திவ்யதம்பதிகளும், அரங்கன் அடியார்களும் ப்ரஸாதித்தவையே இந்த பிருதத் திருநாமங்கள்.* இவை ப்ரஸாதிக்கப்பட்ட ஸந்தர்ப்பங்கள் ( *எங்கு, எப்பொழுது, ஏன், யாரால் ப்ரஸாதிக்கப்பட்டன* ) என்று மேலே கூறப்பெறும்.

பெற்ற பிருதங்களை *வாதமுறையில் ஸ்தாபநம் செய்துகொண்டால் அன்றி* அந்த பிருதங்களை *வஹிக்கல் ஆகாது* என்று ஒரு *நியதி உண்டு.*

ஆகவே ஸ்ரீதேசிகன் தாம் பெற்ற ஒவ்வொரு பிருதையும் ஒரொரு அதிகாரிகள் *ஆக்ஷேபம் செய்ய நேர்பட்ட ஸமயங்களில் அவர்களை வென்று* ஸ்தாபநம் செய்துகொண்டிருக்கிறார்.

பதவி, பெருமை ஆகியவைகளில் *ஸ்வாமிக்கு விருப்பமே இல்லாதிருக்கச் செய்தேயும்,*

திவ்யதம்பதிகளும் அடியார்களும் அன்புடன் அளித்ததைக் காத்துக்கொள்ளாவிடில் *அவர்களை அவமதிப்பு செய்ததாக ஆகும் அன்றோ!*

ஆனது பற்றியே ஸ்ரீதேசிகன், ஓரொரு ஸந்தர்ப்பங்களிலே வாதிகளை வென்று பிருத ஸ்தாபனம் செய்தருளவேண்டியது ஆயிற்று.

ஸ்வாமியின் இந்த பிருதத் திருநாமங்களை ஆக்ஷேபித்து ஸ்வாமிக்கு அறைகூவல் விடுக்கப்பட்ட ஸந்தர்ப்பங்கள் பற்றிய விவரமும் மேலே கூறப்பெறும்.

*ஸ்வாமி தேசிகனின் பிருதத் திருநாமங்களின் பொருள்*

*வேதாந்தாசார்யர்*

உபயவேதாந்தங்களின் ரஹஸ்யப் பொருளை உபதேசம் செய்பவர்.

*ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்*

அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லமை பெற்றிருப்பவர்.

*கவிதார்க்கிக ஸிம்ஹர்*

ஆடம்பரக் கவிகளையும், குதர்க்கம் செய்பவர்களையும் வெல்லுபவர்,

சிறந்த கவிகளுக்குள்ளும் நல்ல தர்க்கிகர்களுக்குள்ளும் ச்ரேஷ்டர்.

*ஸமஸ்யா ஸஹஸ்ரீ*

*ஒரு ச்லோகத்தின் ஒரு மூலையில் அடங்கும் ஓரிரண்டு பதங்களை மாத்ரம் கொடுத்து,*

அதை ச்லோகத்தில் பூர்த்தி செய்விப்பது என்பதாக ஓர் வழக்கம்.

*கவியின் திறமையை* இதைக் கொண்டு *நிர்ணயிப்பார்கள் பூர்வர்கள்.*

இப்படி *ஆயிரம் ச்லோகப் பகுதிகளை உடனுக்கு உடன் பூர்த்தி செய்பவர் ஸமஸ்யா ஸஹஸ்ரீ* என வழங்கப்படுவர்.

*ஸ்ரீமத் வேதாந்த தேசிக வைபவ ப்ரகாசிகா*

ஸ்ரீமத் ஆண்டவன் பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரம வெளியீடு.

****************************************************